**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**

**அ.வ.எண்.70/2022**

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பு 2ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு ஆகஸ்ட் மாதம் 12 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ஹரிபிரியா | மதம் | : இந்து |
| க/பெ | : தணிகாசலம் | ஜாதி | : -- |
| வயது | : 40 | கிராமம் | : ராமகிருஷ்ணாபுரம் |
| தொழில் : | கூலி | வட்டம் | : திருத்தணி |

**12.08.2025**
**வா.சா. 2 திரும்ப அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. வழக்கு தாக்கல் செய்துள்ள தணிகாசலம் எனது கணவர் என்றால் சரிதான். வழக்கு சொத்து பூர்வீக சொத்து என்பதை காட்ட எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்யவில்லை. கண்ணம்மா நாயுடு பெயரில் அடங்கல் வைத்துள்ளேன். கண்ணம்மா நாயுடு வாரிசு நான்தான் என்பதை காட்ட வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அவருக்கு இறப்பு சான்று, வாரிசு சான்றே இல்லை. உண்மையிலேயே நான் கண்ணம்மா நாயுடுவின் வாரிசாக இருந்திருந்தால் நான் வாரிசு சான்று வாங்கி தாக்கல் செய்திருப்பேன் என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. வழக்கு சொத்தில் பிரதிவாதிகள்தான் குடியிருந்து வருகிறார்கள் என்றாலும் மின் கட்டண ரசீதுகள் பிரதிவாதிகள் பெயரில்தான் உள்ளது என்றாலும் அவரும் உள்ளார். நாங்களும் உள்ளோம். அவர் வீட்டிற்கு அவர் வரி கட்டுகிறார். எங்கள் வீட்டிற்கு நாங்கள் வரி கட்டுகிறோம்.

2. பாகப்பிரிவினை வழக்கான அ.வ.எண்.54/2015ல் இந்த வழக்கு சொத்தை சேர்க்கவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கு சொத்து 1ம் பிரதிவாதி நடராஜனின் தனிப்பட்ட சொத்து என்பதால்தான் அ.வ.எண்.54/2015ல் இந்த சொத்தை சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கை என்ன பரிகாரம் கேட்டு தாக்கல் செய்துள்ளோம் என்றால் 292/1Bல் அவரும் 292/1C ல் நாங்களும் உள்ளோம். தற்போது வந்து அதிகமாக பிரச்சனை செய்தார். எனவே வழக்கு தாக்கல் செய்தோம். என் கணவர்

A அட்டவணையில் இருந்து C அட்டவணைக்கு போய் வருவதை தகராறு செய்யக்கூடாது என்றுதான் தாக்கல் செய்துள்ளார் என்றாலும் தற்போது நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

3. A அட்டவணை பொது வழி என சொல்லியிருப்பதில் அந்த வழியின் நீள அகலம் எனது பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்திற்கு என் கணவர் பெயரில் கிரைய ஆவணமோ, பட்டாவோ எதுவும் இல்லை என்றால் சரிதான். வழக்கு சொத்திற்கு என் மாமனார் பெயரிலும் கிரைய ஆவணமோ, பட்டாவோ எதுவும் இல்லை என்றால் சரிதான். எனது பிரமாண வாக்குமூலம் பத்தி 9ல் "என் கணவரின் தந்தையும் 1ம் பிரதிவாதி மற்றும் இதர பெண் வாரிசுகளும் ஒப்புக்கொண்டவாறு அது பொது பாதையாக உள்ளது" என்று நான் கூறியிருப்பதற்கு ஆதரவாக ஆவணம் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கோ என் கணவருக்கோ வழக்கு சொத்தில் எந்த உரிமையும் இல்லை என்றாலும் பிரதிவாதிகள் பெயரில்தான் வருவாய் ஆவணங்கள் ஏற்பட்டு பிரதிவாதிகளின் பாத்திய அனுபவத்தில் சொத்து உள்ளது என்றாலும் நான் என் கணவருக்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

(மறு விசாரணை இல்லை)